**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82/2023</u>**

பெயர் : அமுதசுரபி P.W.1.

க/பெ. : இன்பநாதன்

தேதி : 14.10.2023

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>குறுக்கு விசாரணை:–</u>

எனது தாயார் கோவிந்தம்மாளும், ஆனந்தவள்ளியும் சகோதரிகள் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேறு ஏதேனும் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் நான் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள உயிலில் எனது சகோதரியின் மகள் என்று குறிப்பிட்டு ஆனந்தவள்ளி எழுதியுள்ளார். ஆனந்தவள்ளி எழுதிவைத்த பதிவு செய்யப்படாத உயிலை நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தியுள்ளேனா என்றால் இல்லை. அதனால் அந்த உயில் சந்தேகத்திற்கு உரியது என்றால் சரியல்ல. உண்மையிலேயே ஆனந்தவள்ளி மேற்படி உயிலை எழுதியிருந்தால் அவரே பதிவு செய்து வைத்திருப்பார் என்றால் சரியல்ல. அவர் சொத்தை உயிலின் அடிப்படையிலேயே எனது பெயரில் பட்டா மாற்றம் செய்து கொள்ளலாம் என்றால் சரியல்ல. அதனால் வாரிசு சான்று தேவையில்லை என்றால் சரியல்ல. வாரிசு சான்று கொடுப்பதற்கு சட்ட வரைமுறைகள் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

உண்மையிலேயே ஆனந்தவள்ளி எனக்கு உயில் எழுதி வைத்திருந்தால் அந்த உயிலின் அடிப்படையிலேயே கிராம கணக்கின் படி கிராம நிர்வாக அலுவலரிடம் பதிவுசெய்து பட்டா மாற்றம் செய்துகொள்ள முடியும் என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி எழுதிவைத்த உயிலில் சாட்சிகளாக காட்டுச்சேரியை சேர்ந்த சட்டையப்பன் மற்றும் வடிவேல் ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். ஆனந்தவள்ளி என்னை தத்து எடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனந்தவள்ளி என்னை முறைப்படி தத்து எடுத்திருந்தால் அதற்காக ஆவணங்கள் என்னிடம் இருக்கும் என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி தத்து எடுத்ததை நிரூபிக்காமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. அதுபோல் ஆனந்தவள்ளியின் வாரிசு என நான் வாரிசு உரிமை கோருவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை

என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி இறந்த பிறகு மேற்படி உயிலை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி பெயரில் உள்ள சொத்துக்களுக்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் ஆனந்தவள்ளியின் வாரிசு என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யாததால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயிலில் உள்ள கையொப்பம் ஆனந்தவள்ளியின் உடையதுதான் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆனந்தவள்ளியின் கையொப்பம் உள்ள வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனந்தவள்ளி 6ம் வகுப்பு வரை படித்துள்ளார். நான் ஆனந்தவள்ளி எழுதிவைத்த உயிலை நிரூபிக்காமல் நான் அவரது வாரிசு என உரிமைக்கோர இயலாது என்றால் சரியல்ல. ஆனந்தவள்ளி எழுதிவைத்த உயிலை நான் நிரூபித்தாலே எனக்கு வாரிசு சான்று தேவையில்லை என்றால் சரியல்ல. அதனால் உயில் சம்பந்தமான வேறொரு வழக்கினை தாக்கல் செய்து நான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

மேலும் குறுக்கு விசாரணை செய்வதற்கு பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.